1974 மார்ச் 26]

மென்பதற்காக அறிவித்தேனே தவிர வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட சின்னத் தகராறுகளினால் பெரிய விளைவுகள் ஏற்படாத வகையில் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Textile workers in Coimbatore

623 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Committee appointed by the Government to examine the grievances of textile workers of Coimbatore has submitted its report; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை அரசின் ஆய்வில் இருக்கும்பொழுது பஞ்சாலைத் தொழிலாளர்களின் சார்பாக பெரும்பாலான தொழிற் சங்கங்கள் தங்களது கோரிக்கையான அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி முதலியவைகளின் மற்றத்தை வலியுறுத்தி பஞ்சாலை நிர்வாகத்தினருக்கு வேலைநிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தது. தொழிலாளர் துறை ஆணையரின் சமரச பேச்சுவார்த்தைகள் உடன்பாட்டுக்கு வழிவகுக்காததால் தொழில் தகராறுகள் சட்டம் 1947 (மத்தியச் சட்டம் XIV 1947) பிரிவு -ன்கீழ் அரசு ஒரு சிறப்பு தொழிற் தீர்ப்பாயம் அமைத்தது. ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியான திரு. ஆர். சதாசிவம் அச்சிறப்பு தொழிற் தீர்ப்பாயமாக நியமிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட தொழிற் தகராறு தீர்ப்புக்காக விடப்பட்டது. இம்மாநிலத்தில் பெரும்பாலான பஞ்சாலைகளில் 1—2—1974 முதல் பொது வேலைநிறுத்தம் தொடங்கியது. பெரும்பாலான நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே 28—2—1974 அன்று ஒரு இரு தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. பி அல்டு சி மில்ஸ், தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை நீங்கலாக, 1—2—1974 முதலும் அதன் பிறகும் அடிப்படைச் சம்பளம் மற்றும் பஞ்சப்படி முதலிய கோரிக்கைகளின் மீது வேலைநிறுத்தம் நடைபெற்ற பஞ்சாலைகளில் 1—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் 7—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

பி அண்டு சி மில்ஸ் சம்பந்தமாக 8—3—1974-ல் ஒரு உடன்பாடு கையெழுத்தாகி 11—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப் பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : சார், அருணகிரி கமிட்டியின் முன்னுரையில் தொழிலாளர்களுக்கு, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக 400 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக் கிறது. இன்றைக்கு 5 ரூபாய் மட்டும் கொடுத்திருப்பதால் மறுபடியும் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடந்து, முடிவில் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கும்பொழுதே 'அட்ஜூடி கேஷனுக்கு' அனுப்புவதற்கு காரணம் என்ன ? மாண்புமிகு முதலமைச்சரவர்களோ அல்லது லேபர் மினிஸ்டர் அவர்களோ நேரடியாக தொழிலாளர்களைக் கூப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்து வதற்கு என்ன தடங்கல் இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அந்த அறிக்கை வந்தது, ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது, அதறகுப்பிறகு பேச்சுவார்த்தை நடந்தது என்று உறுப்பினரே சொன்னார்கள். அதற்குத்தான் நாங்களும் கவலைப்படுகிறோம். அறிக்கை வந்தது, பேச்சுவார்த்தை நடந்தது, அது முறிந்து விட்டது என்ற பிறகு ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்தால், அது பொருத்தமாக இருந்திருக்கும். முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடக்காததுதான் இதற்குக் காரணம்.

கோயில்பட்டி பூவணநாதசாமி கோயில்

*609 **வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியிலுள்ள பூவணநாதசாமி தேவஸ்தானத்தில் தற்போது எத்தனை அறங் காவலர்கள் உள்ளனர் ?

(இ) அவர்களில் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?